செ.வெ.எண்: 50 நாள்: 22.10.2021

# நாகப்பட்டினம் மாவட்டம்
# தமிழ் வளர்ச்சித் துறை
# மாவட்டஆட்சியரின் செய்திக் குறிப்பு

இலக்கியங்கள் அனைத்திலும் சிறந்ததும் உன்னதமானதும் மனிதகுலம் அனைத்திற்குமான தன்னிகரற்ற படைப்பு திருக்குறள். அத்தகைய சிறப்புமிக்க அறக்கருத்துகளடங்கிய திருக்குறட்பாக்களை மாணவர்கள் இளம் வயதிலேயே மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணி போல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டும். தாம் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாக அமையும். அதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு தலா ரூ.10,000/-வீதம் பரிசுத் தொகை, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப் பெறுகின்றனர்.

திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுக்கு கலந்து கொள்ளும் மாணவர்கள், திறனறி குழுவினரால் திறனாய்வு செய்து தகுதி பெற்றவர்கள் தெரிவு செய்யப்பெற்று, பரிசு பெறுவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யப் பெறுகிறார்கள். திறனாய்வு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூன்றாம் தளத்திலுள்ள தமிழ் வளர்ச்சித் துறையினரால் நடத்தப்பெறும்.

**திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுபெறுவதற்கானவிதிமுறைகள்:**

1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும். இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும். திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப் பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும். நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு/அரசுஉதவிபெறும் /தனியார் /நடுவன் அரசு போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரைபயிலும் மாணவர்கள் பங்குபெறலாம். நாகப்பட்டினம் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ளஅரசு/அரசுஉதவிபெறும் கல்லூரிகள்,சுயநிதிக் கல்லூரிகள்,கலைமற்றும் அறிவியல் கல்லூரிகள்,பொறியியற் கல்லூரிகள்,மருத்துவக் கல்லூரிகள்,பல்தொழில் நுட்பக் கல்லாரிகள்மற்றும் தொழிற்கூடங்கள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் பங்குபெறலாம். தமிழ் வளர்ச்சித் துறையால்

வழங்கப்பெறும் இப்பரிசினை இதற்கு முன்னர் பெற்றவராக இருத்தல் கூடாது. திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

மேற்குறிப்பிட்டவாறு, திருக்குறள் முற்றோதும் திறன்படைத்த மாணவர்கள் www.tamilvalarchithurai.com என்ற வலைதளத்தில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலவலக வளாகம் மூன்றாம் தளம் அறை எண்.307-இல் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் 25.11.2021-க்குள் விண்ணப்பத்திடலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலகத் தொலைபேசி எண்.04365-251281-இலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**